## கேரளாவுக்கு இடம்பெயரும் தமிழக காடர் பழங்குடியினர் - பின்புலம் என்ன?


மண் மற்றும் மூங்கில் மூலம் கட்டப்பட்ட காடர் பழங்குடியின மக்களின் வீடுகள்.

**பொள்ளாச்சி:** ஆனைமலை காடுகளின் பூர்வகுடிகளான காடர் இனமக்கள் வேலைவாய்ப்பு, குடிநீர், மின்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கிடைக்காததால் வேலை தேடி குடும்பத்துடன் கேரளா மாநில வனப்பகுதிக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர். மேற்கு தொடர்ச்சி மலையில், பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட, உலாந்தி வனச்சரகத்தில் பரம்பிக்குளம் செல்லும் வழியில், எருமைப்பாறை வன கிராமம் உள்ளது. ஆனைமலை குன்று காடுகளை பூர்வீகமாக கொண்ட 40-க்கும் அதிகமான காடர் குடும்பத்தினர் இங்கு வசித்து வந்தனர்.

தேன் சேகரிப்பு, கிழங்கு தோண்டுதல், மிளகு, மூலிகை சேகரிப்பு மற்றும் சிறு வன மகசூல் என தங்கள் வாழ்க்கை சூழலை அமைத்துக்கொண்டு காடுகளை மட்டுமே நம்பி வாழ்ந்து வந்த காடர்கள், வேலைவாய்ப்பு கிடைக்காமல் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டதால் அருகில் உள்ள கேரளா வனப்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர். தற்போது 27 குடும்பங்கள் மட்டுமே வசித்து வருகின்றனர் என பழங்குடியின செயற்பாட்டாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பரமசிவம் கூறியதாவது: ஆங்கிலேயர் காலத்தில் வளர்ப்பு யானை பராமரிப்பு, தேக்கு மரக்கன்று நடுதல், வனத்தில் தீ தடுப்பு உள்ளிட்ட வனத்துறை சார்ந்த பணிகளை காடர் இன பழங்குடியின ஆண்கள் மேற்கொண்டு வந்தனர். பெண்கள் சிறு வன மகசூல் மூலம் வாழ்வாதாரத்தை அமைத்துக்கொண்டனர். எருமைப்பாறை பழங்குடியின கிராமத்தில் பல தலைமுறைகளாக வசித்து வரும் காடர் இன மக்களுக்கு இன்று வரை அடிப்படை வசதிகள் எதுவும் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரியது.

சுகாதாரமான குடிநீர் கிடைக்காமல், காடுகளில் விலங்குகள் பருகும் ஊற்றுகளில் கிடைக்கும் தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர். குடியிருப்புக்கு அருகிலேயே மின்கம்பிகள் சென்றாலும், அரைநூற்றாண்டுக்கு மேலாக இன்னும் மின்வசதி கிடைக்கவில்லை. மழையில் கரையும் மண்சுவரும், இரவில் ஒளிரும் மண்ணெண்ணெய் விளக்கும் மட்டுமே இன்று காடர்களுக்கு துணையாக உள்ளது. அடிப்படை வசதிகள் மட்டுமின்றி வேலைவாய்ப்பு கிடைக்காததால், பல குடும்பங்கள் தமிழகத்தின் ஆனைமலை புலிகள் காப்பக வனப்பகுதியில் இருந்து வெளியேறி கேரளாவின் பரம்பிக்குளம் புலிகள் காப்பக வனப்பகுதிக்கு இடம்பெயர்ந்து சென்று விட்டனர். 40 குடும்பங்கள் இருந்த எருமைப்பாறை கிராமத்தில் தற்போது 27 குடும்பங்கள் மட்டுமே உள்ளன.

கேரளா வனப்பகுதியில், வேட்டைத்தடுப்பு காவலர் பணி, தீத்தடுப்பு காவலர் உள்ளிட்ட பணிகளில் ஆண்களுக்கும், அணைக்கட்டு பராமரிப்பு, காடுகளில் தீத்தடுப்பு கோடு அமைத்தல் ஆகிய பணிகளில் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைப்பதால் கேரளாவின் குடியாறுகுற்றி, எர்த்டேம் காலனி, கடவு காலனி பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து உள்ளனர். கேரளா அரசு தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பரம்பிக்குளம் வனப்பகுதியில் உள்ள குடியாறுகுற்றி, கடவு காலனி, 5-ம் காலனி, பூம்பாறை, எர்த் டேம் காலனி மற்றும் பிஏபி காலனி ஆகிய 6 வன கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி உள்ளது.

தமிழகத்தில் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வனப்பகுதியில் உள்ள பழங்குடியின கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பு திட்ட அட்டை கூட வழங்கவில்லை. கேரளா மாநிலத்தின் பரம்பிக்குளம் வனப்பகுதியில் 18 கி.மீ தொலைவில் உள்ள பழங்குடியின கிராமங்களுக்கு புதைவட மின்கம்பி மூலம் மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எருமைப்பாறை பழங்குடியின கிராமம் வழியாக மின்பாதை சென்றாலும் அந்த கிராமத்துக்கு மின்வசதி செய்து தரவில்லை. மின்மாற்றி அமைக்கப்பட்டதுடன் பணி நிறுத்தப்பட்டுள்ளது. எருமைப்பாறை பழங்குடியினர் தமிழகத்தில் இருந்து கேரளாவுக்கு இடம்பெயர்ந்து செல்வதற்கு அடிப்படை வசதிகளும், வேலைவாய்ப்பும் இல்லாததே காரணமாகும். தமிழக அரசு பழங்குடியினர் வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், இடம் பெயர்ந்து செல்வதை தடுக்கவும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சென்னை உயர் நீதிமன்றத்தில் 2 நீதிபதிகள் பதவியேற்பு




சென்னை உயர் நீதிமன்றத்தில் புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட நீதிபதிகள் எம்.சுதீர்குமார், விவேக்குமார் சிங் ஆகியோருக்கு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா நேற்று மாலை பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.படங்கள்: ம.பிரபு

**சென்னை:** சென்னை உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்யப்பட்ட இரு நீதிபதிகளுக்கு தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா நேற்று பதவிப் பிரமாணம் செய்தார்.

அலஹாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக பணிபுரிந்த விவேக்குமார் சிங் மற்றும் தெலங்கானா உயர் நீதிமன்ற நீதிபதியாக பணிபுரிந்த எம்.சுதீர் குமார் ஆகியோரை சென்னை உயர் நீதிமன்றத்துக்கு இடமாறுதல் செய்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் நேற்று மாலை நடைபெற்ற பதவியேற்பு விழாவில், தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா இருவருக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இருவரையும் வரவேற்று அரசு தலைமைவழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் தலைவர் பி.எஸ். அமல்ராஜ் மற்றும் வழக்கறிஞர் சங்க நிர்வாகிகள் பலர் பேசினர்.

1968 மார்ச் 25 -ம் தேதி உத்தரபிரதேச மாநிலம் ரேவா மாவட்டத்தில் பிறந்த விவேக் குமார் சிங், கடந்த2017 செப்டம்பரில் அலஹாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இதேபோல கடந்த 1969 டிச.21 -ம் தேதி தெலங்கானா மாநிலம் கம்மம் மாவட்டத்தில் பிறந்த எம். சுதீர் குமார், 2022 மார்ச் மாதம் தெலங்கானா உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நீதிபதிகளுடன் சேர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை 67 ஆக உயர்ந்துள்ளது. காலியிடங்களின் எண்ணிக்கை 8 ஆக குறைந்துள்ளது.

## தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் - வேலவன் செந்தில்குமார், அனாஹத் பட்டம் வென்று அசத்தல்

EVA



இறுதிப் போட்டியில் அபய் சிங்குக்கு எதிராக விளையாடிய வேலவன் செந்தில்குமார். படம்: எஸ்.சத்தியசீலன்

**சென்னை**: 79-வது தேசிய ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் சென்னையில் கடந்த 17-ம் தேதி தொடங்கியது. இதன் இறுதி நாளான நேற்று மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் 15 வயதான அனாஹத் சிங், 27 வயதான தன்வி கன்னாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் முதல் செட்டில் கடுமையாக போராடிய போதிலும் அனாஹத் சிங் 9-11 என நெருக்கமாக தோல்வி அடைந்தார். 2-வதுசெட்டை அனாஹத் சிங் 11-4 தன்வசப்படுத்தினார். அப்போது திடீரென தன்வி கன்னா காயம் அடைந்தார்.

இதைத் தொடர்ந்து அவர், போட்டியில் இருந்து விலகினார். இதனால் அனாஹத் சிங் சாம்பியன் பட்டம் வென்றதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் கடந்த 23 வருடங்களுக்குப் பிறகு தேசிய சீனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இளம் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார் அனாஹத் சிங்.

இந்த வகையில் கடந்த 2000-ம் ஆண்டு ஜோஷ்னா சின்னப்பா, 14 வயதில் சாம்பியன் பட்டம் வென்றதே சாதனையாக உள்ளது. சீனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப்பில் 2-வது முறையாக பங்கேற்ற நிலையில் அனாஹத் சிங் வாகை சூடியுள்ளார். கடந்த ஆண்டு இறுதிப் போட்டியில் அவர், ஜோஷ்னா சின்னப்பாவிடம் தோல்வி அடைந்திருந்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் அபய் சிங் - வேலவன் செந்தில்குமார் மோதினார்கள். இதில் தமிழகத்தைச் சேர்ந்த வேலவன் செந்தில்குமார் 12-10, 11-3, 12-10 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றார்.

## டிசம்பர் 10 முதல் 17-ம் தேதி வரை கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள்




**புதுடெல்லி**: வரும் டிசம்பர் 10-ம் தேதி முதல் 17-ம் தேதி வரை கேலோ இந்தியா பாரா விளையாட்டு போட்டிகள் டெல்லியில் நடைபெறும் என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் தாக்குர் அறிவித்துள்ளார்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 1,350-க்கும் அதிகமான விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர். தடகளப் போட்டிகள், துப்பாக்கிச்சூடு, வில்வித்தை, கால்பந்து, பாட்மிண்டன், டேபிள் டென்னிஸ், பளுதூக்குதல் என மொத்தம் 7 பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

இதுகுறித்து மத்திய விளையாட்டு துறை அமைச்சர் அனுராக் தாக்குர் தனது சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள வீடியோவில் கூறியிருப்பதாவது, “நாட்டில் முதன்முறையாக கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் 10 முதல் 17-ம் தேதி வரை நடைபெற உள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக்

கொள்கிறேன். டெல்லியில் இந்திய விளையாட்டுத் துறை ஆணையத்தின் கீழ் அமைந்துள்ள 3 மைதானங்களில் மொத்தம் 7 பிரிவுகளில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் திருப்புமுனையாக அமையும்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள ஐஜி திடல், துக்ளகாபாத் மற்றும் ஜேஎல்என் மைதானங்களில் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹாங்சோவில் நடைபெற்ற ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்ட நட்சத்திர வீரர், வீராங்கனைகளான ஷீத்தல் தேவி, பாவினா பட்டேல், ஏக்தா பியான், நீரஜ் யாதவ், சிங்ராஜ், மணீஷ், சோனல், ராகேஷ் குமார் மற்றும் சரிதா ஆகியோர் தங்களுடைய சொந்த மாநிலங்கள் தரப்பில் இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

EVA STALIN IAS ACADEMY